**மொழி கற்பித்தல் - புதிய அணுகுமுறை**

ஒருவர் மற்றவரோடு பேச்சு வடிவிலும், எழுத்து வடிவிலும் கருத்தைப் பகிர்ந்து கொள்ளப் பயன்படும் கருவியே மொழி எனப்படும். மொழி கற்பித்தலுக்கான அடிப்படையை வரிசைப்படுத்தி, மொழி கற்றலை எளிமைப் படுத்துவதே எமது நோக்கம்.

மொழியின் வரிவடிவமும் ஒலிவடிவமும்.

தொடக்க நிலையில் மாந்தர் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் ஒலியைப் பயன்படுத்தினர். வெவ்வேறு வகையான ஒலிக்குறியீடுகளைத் தங்களது கருத்துப் பகிர்விற்கு, வரிசைப்படுத்தினர். விலங்குகளின் ஒலிகளைக் கேட்டு, அந்த ஒலிக்கான அவைகளின் செயற்பாடுகளை உற்று நோக்கிக் கற்றுக் கொண்டனர். தொடக்க நிலையில் அவர்களது மொழிக்கான ஒலிக்குறியீடுகள் மிகக் குறைவாகவே இருந்தன. விலங்குநிலையிலிருந்து மாந்தநிலைக்குப் பரிணாமம் அடைந்த பொழுது, மொழியை அவர்களால் ஒலிக் குறியீடுகளுக்குள் அடக்க முடியவில்லை. பார்த்ததை, பிறரிடம் சொல்ல விரும்புவதை படங்கள் வடிவில் வரைந்து, ஒலித்துப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினர். எழுத்தின் வரிவடிவம் தோன்றலானது. காலம் செல்லச் செல்ல, எழுத்தின் வரிவடிவம் உருமாறத் தொடங்கியது. எழுத்து எழுதும் இடத்திற்குத் தகுந்தவாறு அந்த எழுத்தும் மாறியது. கல்லில் தொடங்கிய இந்தப் பயணம், மரப்பட்டை, மண்பாண்டம், உலோகத் தகடுகள், பனை ஓலைகள் எனப் பயணித்துக் கொண்டே இருந்தது. 19 ஆம் நூற்றாண்டில், தாளின் கண்டுபிடிப்பும் அச்சாக்கமும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இன்றைய நிலையில், தாளே இல்லாமல் ஊசிமுனையளவு இடத்தில் 1330 திருக்குறளையே பதிவு செய்து எடுத்துச் செல்லலாம் என்ற நிலைக்குக் கணினி வழிவகுத்துள்ளது. எழுத்தின் வரிவடிவம் இன்று எண்ணுக்குள் சென்றுவிட்டது.

மொழியினுடைய ஒலிப்பு முறை என்பது, அவர்கள் வாழ்ந்த சூழலுக்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. வெடிப்பொலி, மூக்கொலி, உரசொலி என்பவை அவர்களது இருப்பிடத்திற்கும், வாழ்வுமுறைக்கும் ஏற்றவாறு வேறுபட்டு ஒலித்தது. இதன் விளைவாக மொழியின் ஒலிவடிவம் உலகிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறானதாக மாற்றம் அடைந்தது. வெவ்வேறு வகையான மொழிகள் உருவாகின. உலகிலுள்ள மொழிகள் அனைத்தும் தொடக்க நிலையில் ஒரு மொழியிலிருந்து பிறந்திருந்தாலும் சூழலுக்கு ஏற்ப வெவ்வேறு வகையினதாக மாறின. இன்று காணுகிற வெவ்வேறு மொழிகளுக்கிடையில் அடிப்படையான சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந்த ஒற்றுமையின் அடிப்படையில் மொழி கற்பித்தல் அமைய வேண்டும். இப்படி அமையுமானால் ஒருவர் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் எளிமையாகக் கற்றுக் கொள்ளலாம். மொழி கற்பித்தலுக்கான இந்த அடிப்படையை (படிநிலைகளை), நான் இங்கு வரிசைப்படுத்த விரும்புகிறேன்.

மொழி கற்றலுக்கான படிநிலைகளாகக் கீழ்க் கண்டவற்றை வரிசைப்படுத்தலாம்.

1) எழுத்தின் வரிவடிவத்தை உரியமுறையில் எழுதுதல்
2) எழுத்தின் வரிவடிவத்தை சரியான முறையில் ஒலித்தல்.
3) இரண்டு எழுத்துகளை இணைத்துப் படித்தல்.(ஒலிப்பு முறையை உணர வைத்தல்)
4) இரண்டெழுத்துச் சொற்களில் தொடங்கி ஐந்தெழுத்துச் சொற்கள் வரை படித்தல்
5) படித்த சொற்களைப் புரிய வைத்தல். (சொற்களஞ்சியம் பெருக்குதல்)
6) சூழலுக்கு ஏற்ப உரையாடுதல். (3 சொற்களுக்கு மிகாமல்)
7) படித்த பகுதிகளில் உரையாடுதல், குறிப்பு எடுத்தல். (முதன்மைச் சொற்களை அறிதல்)
8) படித்த பகுதிகளைச் சிறு தொடர்களாக எழுத ஊக்குவித்தல்
9) படித்த பகுதிகளை விவரித்தல், நடித்துக் காட்டுதல்
10) சொந்தமாகக் கதை, கவிதை, கட்டுரை எழுதுதல்
11) படித்தவற்றை விளக்குதல், மேடையில் பேசுதல்

இந்தப் 11 படிநிலைகளும் உளவியல் நோக்கில், கற்றல் கற்பித்தல் நுட்பக் கூறுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இந்தப் படிநிலைகளின்வழி, மொழி கற்பித்தலுக்கான பாடங்களை உருவாக்கினால் எந்த மொழியையும் எளிமையாகக் கற்பித்து விடலாம். 1 - 5 படிநிலைகளுக்கான தமிழ் கற்பித்தல் பாடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1) எழுத்தின் வரிவடிவத்தை உரிய முறையில் எழுதுதல்.

பழங்காலத்தில், கருத்துப் பகிர்வுக்காக மனிதன் வரைந்த படங்களில் வட்டமும், நேர்கோடுகளும் இருந்தன. வட்டமே இயல்பானதாகவும், எளிமையானதாகவும் இருந்ததால் தொடக்கநிலை எழுத்துகள் வட்டெழுத்துகளாக இருந்தன. காலம் செல்லச் செல்ல எழுத்துகளின் வரிவடிவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. எழுத்து எழுதப் பயன்படுத்திய பொருள்கள் அவனது எழுத்து வடிவத்தை நிர்ணயித்தன. வட்டம், நேர்கோடு, புள்ளி - என்கிற மூன்றும் எழுத்துகளில் நிலையாக இடம் பெறத் தொடங்கின. இப்பொழுதும்கூட வரிவடிவத்தின் அடிப்படையாக வட்டம், நேர்கோடு, புள்ளி என்பவையே உள்ளன. மேலும் உலகமொழிகளின் வரிவடிவங்கள் அனைத்துமே வட்டம், நேர்கோடு, புள்ளி என்பதனுள் அடங்கிவிடும். எனவே மழலையர் வகுப்புகளில், எழுத்தைத் தொடங்குவதற்கு முன்பு, நேர்கோடு/வட்டம் எழுதப் பயிற்சி தர வேண்டும். இந்தப் பயிற்சிக்கான படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மழலையர்களுக்கு ஒரு திங்கள் இப்பயிற்சியைத் தருவது நல்லது.



மொழியின் வரிவடிவத்தைத் திருத்தமாகவும், அழகாகவும் எழுதுவதற்கு மேலே உள்ள பயிற்சி உதவும் என்று நம்புகிறேன். வரிவடிவத்தை எழுதும் பொழுது எழுத்து எழுதுமுறை என்பது முதன்மையானது. எழுத்தை எங்கு தொடங்குவது, எங்கு முடிப்பது என்பதை மாணவர்கள் மனதில் நன்கு பதிய வைக்க வேண்டும். மொழி கற்பிக்கும் பொழுது ஆசிரியர் இந்த எழுத்து எழுதுமுறையை - மாணவனின் கையைப் பிடித்துக் கொண்டு சொல்லிக் கொடுக்க வேண்டும். இன்றும்கூட நம் தமிழ்மக்கள் நெல்லில் “அ” எழுதிக் கற்பிக்கத் தொடங்குவதைக் காணலாம். தொடக்கநிலைக் கற்பித்தல் தொழில் நுட்பத்தில், உப்புத்தாள் எழுத்தின் மீது விளம்புதல், புள்ளிகளை இணைத்துக் கோடு போடுதல், எழுத்தின் மீது கல்/விதைகளை அடுக்குதல், எழுத்தின் மீது எழுதிப் பழகுதல் என்பவை அறிமுகப் படுத்தப் படுகின்றன. இன்றைய கணினித் தொழில் நுட்பத்தில் அனிமேசன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி எழுத்து எழுதுமுறையை எளிமையாகக் காட்டி விடலாம். (தமிழ் கற்பித்தலுக்கான தமிழமுது குறுவட்டில் அனைத்து எழுத்துகளின் எழுதுமுறையும் அனிமேசன் நுட்பத்தில் தரப்பட்டுள்ளன)

2) எழுத்தின் வரிவடிவத்தைச் சரியான முறையில் ஒலித்தல்.

மொழி கற்பித்தலில் எழுத்தின் வரிவடிவத்தைச் சரியான முறையில் ஒலிப்பது என்பது இன்றியமையாதது. இன்றும் கூட தமிழ் எழுத்துகளில் ழ, ல, ள, - ர, ற, - ண, ன, ந - எழுத்துகளைப் பலரும் பிழையாகவே ஒலிக்கின்றனர். மழலையர்களுக்கான எழுத்து அறிமுகத்தின்பொழுதே சரியான ஒலிப்புமுறையைச் சொல்லிக் கொடுத்தால்தான் அது அவர்களுள் ஆழமாகப் பதியும். ஆசிரியர் சரியாகவும், மாணவர்களுக்குத் தெளிவாகக் கேட்கும் வகையிலும் எழுத்துகளை ஒலித்துக் காட்டினால்தான் வெற்றி கிட்டும், இல்லையென்றால் பிரச்சனைதான். எழுத்து ஒலிப்பு முறையை ஒலிநாடாவில் பதிவு செய்து மாணவர்களைப் பலமுறை கேட்க வைத்து - சரியான ஒலிப்பு முறைக்கு வழிகாட்டலாம் (தமிழ் கற்பித்தலுக்கான தமிழமுது குறுவட்டில் எழுத்தின் ஒலிப்புமுறை காட்டப் பட்டுள்ளன. காட்டியை எழுத்தின் மீது கொண்டு சென்றால் எழுத்தின் ஒலிப்பு முறை கேட்கும். மேலும் ல, ள, ழ கற்பித்தலின் பொழுது நாக்கின் நிலையும், ஒலிப்பு முறையும் குறுவட்டில் காட்டப்பட்டுள்ளன)







3) இரண்டு எழுத்துகளை இணைத்துப் படித்தல். (ஒலிப்பு முறையை உணர வைத்தல்)

மொழி கற்பித்தலில் இரண்டு எழுத்துகளை இணைத்துப்படிக்க ஊக்குவிப்பது என்பது இன்றியமையாதது. ஆனால் இவை பாடப்புத்தகங்களில் இடம் பெறுவது இல்லை. மாணவர்கள் கற்ற எழுத்துகளில், இரண்டு எழுத்துகளை இணைத்துப் படிக்க வைத்தால், படித்தல் திறன் மாணவர்களுக்கு எளிமையாகும். சொற்களைப் படிக்க முடியாமல் தடுமாறுவதற்கான அடிப்படையான காரணம் இப்படி இணைத்துப் படிக்க வைக்காததுதான். தமிழ் ஓர் ஒலியன் மொழி (phonetic language). எனவே இரண்டு எழுத்துகளை இணைத்து ஒலித்தால் அதற்குரிய ஒலிப்புமுறை தானாக வந்துவிடும். மாணவர்கள் தாங்களாகவே கண்டறிந்து இந்த ஒலிப்பினைச் செய்ய வேண்டும். ஆசிரியர் சொல்லிக் கொடுக்கக்கூடாது. மாணவர்கள் ஒலிப்பினைத் தாங்களாகவே கண்டறியும் பொழுது சொற்களை எளிமையாக ஒலித்து விடுவார்கள். மாணவர்கள் ஒலிக்கத் தடுமாறினால், "இணைத்து ஒலிக்கவும், வேகமாக ஒலிக்கவும்" - என்று ஊக்கப்படுத்த வேண்டும். இணைத்து ஒலிக்க நண்பர்களிடமிருந்த கற்றலை (learning from the peer group) ஊக்குவிக்கலாம். ஆசிரியர் ஒலித்துக் காட்டினால் அது மனப்பாடமாகத்தான் பதியும். ஆங்கிலம் ஒலியன் மொழி அல்ல (unphonetic language) ஆங்கிலத்தில் இரண்டு எழுத்துகளை இணைத்துப் படிக்க வைக்கும் பொழுது மூன்றாவது எழுத்தைப் பொருத்து ஒலிப்பு முறையானது மாறுபடும். எடுத்துக்காட்டாக, ca என்பதைக் "க" என்று ஒலிக்கலாம். cat என்று வரும் பொழுது "ஏ" ஆகும், call என்று வரும் பொழுது "ஆ" என ஒலிக்கும். இரண்டு எழுத்துகள் இணையும் பொழுது எவ்வாறெல்லாம் வேறுபடும் என்பதை ஒழுங்குபடுத்திப் பட்டியலிட்டு இணைத்துக் காட்டினால் மாணவர்கள் ஆங்கிலச் சொற்களையும் சரியாக ஒலிப்பார்கள். இது அடிப்படை.

ஆக இரண்டு எழுத்துகளை இணைத்துப் படிக்க வைப்பது என்பது மொழி கற்பித்தலில் இன்றியமையாததாகும். ஆனால் அதைத்தான் நாம் பாடப்புத்தகத்தில் சொல்லிக் கொடுப்பது இல்லை. அவை பொருளற்ற சொற்கள் என விட்டுவிடுகிறோம்.

இப்பொழுது தமிழ்ப் படித்தல் திறனை வளர்த்துவதற்காக உருவாக்கப் பட்டுள்ள 32 அட்டைகள் பற்றி பார்ப்போம். (இவை www.thamizham.net இல் pdf கோப்பாக உள்ளது)

இந்த 32 அட்டைகளும் சூளேசுவரன்பட்டி தாய்த்தமிழ்த் தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் ஒவ்வொரு கூறுகளாக ஐந்து ஆண்டுகள் ஆய்வு செய்த பிறகே உருவானவை.

இவை மாணவர்களது புரிதல் திறனை (understanding - U) முதன்மைப்படுத்தி, உளவியல் அடிப்படையில் (child psychology based arrangement) வரிசைப்படுத்தப்பட்ட, திட்டமிட்டுக் கற்பித்தலின் (Progeammed Learning) வழிமுறைகளை உள்வாங்கிய, செலவே இல்லாத (zero cost) பயிற்சிகளைக் கொண்ட, கற்பித்தல் தொழில் நுட்பங்களை உள்ளடக்கியவை.

⊡ மிகக் குறைந்த நாள்களுக்குள் தமிழ் மொழியைக் கற்பிக்கிற அணுகுமுறை இது.

⊡ ஆசிரியர் ஒவ்வொரு நாளும் 15 நிமிடங்கள் சொல்லிக் கொடுத்தால் போதும். மூன்றே மாதங்களில் மாணவர்கள் செய்தித்தாளைப் படிக்கத் தொடங்கி விடுவார்கள்.

⊡ தமிழில் உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள் - உள்ளன. தமிழில் உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய் உருவாகிறது. பெரும்பாலான மாணவர்கள் மெய்யெழுத்துகளில் தவறு செய்கிறார்கள். "அ" வரிசை உயிர்மெய் எழுத்தையும், அதற்குரிய மெய்யெழுத்தையும் ஒரே அட்டையில் அறிமுகப்படுத்தும் பொழுது மெய்யெழுத்தை தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். எனவே தான் ஒவ்வொரு அட்டையிலும் ட, ட் ப,ப் ம,ம் - என்று எழுத்துகள் அறிமுகப்படுத்தப் படுகின்றன.










ட, ட் எழுத்தை எழுதிக்காட்டி வரிவடிவத்தையும், ஒலித்துக்காட்டி ஒலிவடிவத்தையும் அறிமுகப்படுத்திய பிறகு, குறிப்பேட்டில் எழுதிப்பழகவும், ஒலித்துப் பழகவும் வாய்ப்புத் தரவேண்டும். பொதுவாக இரண்டு நாள்களுக்குள் இந்த இரண்டு எழுத்துகளையும் கற்றுக் கொள்வார்கள். மெதுவாகக் கற்போருக்கு இன்னும் இரண்டு நாள்கள் ஆகலாம். அவர்கள் ஆழமாகக் கற்கும் வரை காத்திருக்க வேண்டும். அவர்கள் ஆழமாக உள்வாங்கி விட்டார்களா என்று அறிய, அடுத்த நாள் மதிப்பீடு (Evaluation) செய்ய வேண்டும். மதிப்பீட்டிற்காக நாம் மாணவர்களை எழுதிக்காட்டச் சொல்கிறோம், படித்துக்காட்டச் சொல்கிறோம் - குருட்டு மனப்பாடம் செய்த நம் மாணவர்கள் இரண்டையுமே செய்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் நெஞ்சில் அந்த எழுத்து பதியவில்லை. இதுதான் இன்றைய மதிப்பீட்டின் நிலை. இந்த நிலையை மாற்ற வேண்டும். எழுத்தை அவர்கள் உள்வாங்கி இருந்தால் அவர்களால் அந்த எழுத்தை மற்ற எழுத்துகளிலிருந்து பிரித்து எடுத்து அடையாளம் கண்டு ஒலிக்க முடியும். இந்த மதிப்பீட்டை நிகழ்த்தினால் போதும். எழுதிக் காட்ட வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. எழுத்தைத் ஒவ்வொரு நாளும் அடையாளம் காணும்பொழுது, எழுத்து அவர்களுக்குள் நன்கு பதியும். பிறகு அவர்கள் எழுத்தை எழுதி விடுவார்கள். எனவே எழுதிக் காட்ட வேண்டும் என்று தொடக்க நிலையில் நெருக்க வேண்டாம். இயல்பாக எழுதினால் வாழ்த்துங்கள். இல்லை என்றால் வருந்த வேண்டாம்.

www.thamizham.net

இந்த 32 அட்டைகளை வைத்துக் கொண்டு எப்படிக் கற்பிப்பது ?

இந்த அட்டைகளை ஒவ்வொன்றாகக் கற்பிக்கவும். அட்டையில் உள்ள எழுத்தை எழுதிக் காட்டி விட்டார்கள் என்று வேகம் வேகமாக அடுத்த அட்டைக்குப் போனால், முதலில் கற்ற எழுத்துகள் மறந்து கொண்டே போகும். எனவே ஒரு அட்டையை மாணவர்கள் தெளிவாக உள்வாங்கிய பிறகே அடுத்த அட்டைக்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்வதற்கு முன்பு, அதற்கு முன்பு கற்ற மூன்று அட்டைகளில், மீள்பார்வை (recall) செய்த பிறகே இறுதியாகக் கற்ற எழுத்துகளை மதிப்பீடு செய்ய வேண்டும். இப்படியாக ஒவ்வொரு நாளும் முதலில் மீள்பார்வையும், பிறகு மதிப்பீடும் செய்யத் திட்டமிட வேண்டும்.

முதல் அட்டையைக் கற்றுக் கொடுக்கவும். கற்றுக் கொண்ட எழுத்துகளை மதிப்பீடு செய்ய, பழைய செய்தித்தாளை ஒவ்வொரு மாணவர்கள் கையிலும் தனித் தனியாகக் கொடுத்து - கற்றுக் கொண்ட இரண்டு எழுத்துகளில் ஒன்றினைக் கூறி, அந்த எழுத்தைச் செய்தித்தாளில் வட்டமிடச் செய்ய வேண்டும் - வட்டமிடும் பொழுது மாணவர்கள் செய்தித்தாளில் வரியொற்றித் தேடுதலை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு தேடும் பொழுது, இந்த எழுத்து ட இல்லை, ட இல்லை என விரல் நகர்ந்து கொண்டே செல்கிறது. ட எழுத்து வரும் பொழுது மாணவர்களே தேடிக் கண்டுபிடித்ததால் ஆ..ஆ.. ட வந்து விட்டது என்று மகிழ்வோடு வட்டமிடுகிறார்கள்(self appriciation). வட்டமிட்ட மாணவர்கள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கும். இந்த எழுத்து ட இல்லை ட இல்லை என்று விரல் நகரும் பொழுது அவர்களை அறியாமலேயே அவர்களுக்குள் இன்னொரு தமிழ் எழுத்தின் வரிவடிவம் நிழலாகப் பதிவாகிறது. வட்டமிடும் பொழுது மீத்திறம் கொண்டவர்களை (gifted) 10 எழுத்துகளை வட்டமிடச் சொல்லியும், மெதுவாகக் கற்போரை (slow learners) 3 எழுத்துகளை வட்டமிடச் சொல்லியும் - வகுப்பிலுள்ள அனைவரையும் ஒரே சீராக இயங்க வழிவகுக்கலாம். 15 நாள்களிலும் மாணவர்களின் பெயர் எழுதிய அவர்களது செய்தித்தாளையே அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்று முறைபடுத்தும் பொழுது அந்த 15 நாள்களிலும் அவர்கள் வட்டமிட்ட அனைத்து எழுத்துகளும் அவர்களுக்குள் மீள்பார்வை (Recall) ஆகிக் கொண்டே இருக்கும். செய்தித்தாளில் வண்ண எழுத்து, பெரிய எழுத்து, சிறிய எழுத்து, சாய்ந்த எழுத்து, என்கிற பல்வேறு வகையான எழுத்துகள் இருக்கும். பாடப் புத்தகத்தில் ஒரே வகையான எழுத்துகள்தான் இருக்கும். <u>எனவே இந்த வகையிலான மதிப்பிடுதல் செலவில்லாததும், உயர்தரமானதுமாக அமைகிறது.</u>

இரண்டாவது அட்டையில் ப, ப் என்ற இரண்டு எழுத்துகளை அறிமுகப் படுத்துகிறோம். அடுத்த நாள் செய்தித்தாளில் ப, ப் எழுத்துகளை வட்டமிடச் சொல்கிறோம், வட்டமிட்டு விட்டார்கள், இப்பொழுது நான்கு எழுத்துகளை அறிந்து கொண்டார்கள் - அதாவது 4 எழுத்துகளை அடையாளம் கண்டு (Identify) வட்டமிடத் தெரிந்து கொண்டார்கள். நான்கு எழுத்துகள் தெரிந்து கொண்டதுமே அவர்களால் படிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையை (self confidence) உருவாக்க வேண்டும். அதற்காக எழுத்துகளை இணைத்துப் படிக்கும் பயிற்சியானது அட்டையின் பின்பகுதியில் தரப்பட்டுள்ளன. இதை மாணவர்களே படிக்க









ஊக்குவிக்க வேண்டும். தமிழ் ஓர் ஒலியன் மொழி (phonetic language) இரண்டு எழுத்துகளை வேகமாக ஒலித்தாலே அதற்குரிய ஒலிப்புமுறை தானாக வந்துவிடும். 32 அட்டைகளில் 8 ஆவது அட்டை வரை இந்த இரண்டு எழுத்துகளை இணைத்துப் படிக்கும் பயிற்சியானது தரப்பட்டுள்ளன. 90 விழுக்காட்டினர் இந்த 8 அட்டைகளுக்குள் இணைத்துப் படிக்கும் திறனை அடைந்து விடுவார்கள். (விடுபட்ட 10 விழுக்காட்டினரும் படிக்க 16 அட்டைகள் வரை இந்த இரண்டு எழுத்துகளை இணைத்துப் படிக்கும் பயிற்சியை நீட்டிக்க வேண்டும்)

9 ஆவது அட்டையில் - ய், ய - என்ற இரண்டு எழுத்துகள் அறிமுகம் ஆகின்றன. ஒவ்வொரு அட்டையிலும் நாம் கற்பிக்கும் இரண்டு எழுத்துகளில் முதலில் கற்பிக்கும் எழுத்து 60 விழுக்காடும், இரண்டாவதாகக் கற்பிக்கும் எழுத்து 40 விழுக்காடும் பதிவாகிறது. எனவே அதிகம் பயனாகுகிற ய் என்ற ஒற்றெழுத்து 9 ஆவது அட்டையில் முதல் எழுத்தாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இவ்வாறே 9 ஆவது அட்டையிலிருந்து 16 ஆவது அட்டைவரை அதிகம் பயனாகுகிற மெய்யெழுத்துகள் முதலில் கற்பிக்கப்படுகின்றன.







15, 16, ஆவது அட்டைகளில் உள்ள எழுத்துகள் அதிகம் பயனாகாத எழுத்துகள், எனவே அவை இறுதியாக அறிமுகப்படுத்தப் படுகின்றன.

இந்தப் 16 அட்டைகளிலும் எழுத்துகள் மாணவர்களது புரிதல் திறன் அடிப்படையில் நேர்கோட்டு வடிவில் (ட, ப, ம) தொடங்கி, (ச, க, த. ந) வளைகோட்டு வடிவத்தினுடைய படிநிலைவழி நகர்ந்து, (வ, ய, ர, ல) (ன, ண, ள) (ழ, ங, ஞ, ற) எனத் தொடருகின்றன. இந்தப் 16 அட்டைகளில் உள்ள எழுத்துகள்தான் முதன்மையானவை. இவற்றைச் சரியாக அடையாளம் காட்டவும், ஒலிக்கவும், இரண்டு எழுத்துகளை இணைத்துப் படிக்கவும் தெரிந்து கொள்ளும் மாணவர்கள் அடுத்த நிலைக்குச் செல்லலாம். நிலை 1 இல் உள்ள அட்டைகளின் ஓரங்கள் பச்சை வண்ணமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இந்த அட்டைகளை முடிக்க இரண்டு மாதங்கள் ஆனாலும் தவறில்லை. நிலை 1 இல் உள்ள அட்டைகளைத் தெளிவாக முடித்த பின்னரே அடுத்த நிலைக்குச் செல்ல வேண்டும்.

இந்தப் 16 அட்டைகளின் வழி 36 எழுத்துகள் கற்பிக்கப்படுகின்றன. பொதுவாகவே மாணவர்கள் தடுமாறுகிற 18 மெய்யெழுத்துகளும் இந்த அட்டைகளின் வழியாகக் கற்பிக்கப்படுகின்றன. இந்த 36 எழுத்துகளை எப்படி இணைத்துக் கொடுத்தாலும் மாணவர்கள் அதனைப் படிக்கும் ஆற்றலைப் பெற்றுவிடுகின்றனர். இரண்டு எழுத்துகள் மட்டுமில்லாது இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துகள் இணைத்து உருவான சொற்களையும் படிக்கத் தெரிந்து கொள்கிறார்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு, அவர்கள் படிக்கும் இந்தச் சொற்களுக்கான பொருளைச் சொல்லித்தர வேண்டியதில்லை. அவர்களாகவே புரிந்து கொள்வார்கள். தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அல்லது தமிழ்ச் சூழலில் இல்லாத வெளிநாட்டுத் தமிழ் மழலையர்களுக்கு, சொற்களுக்கான பொருளைச் சொல்லித்தர வேண்டியது தவிர்க்க முடியாததொன்று. சொற்களுக்கான

பொருளை அவர்களால் நினைவில் நிறுத்த முடியாது. சொற்கள் நினைவில் நின்றால்தான் மொழியைத் திறமையாகக் கையாள இயலும். நிறைய சொற்களை நினைவில் நிறுத்துவதைச் சொற்களஞ்சியம் பெருக்குதல் எனலாம். மாணவர்களிடம் சொற்களஞ்சியம் பெருக்க படங்களுடன் சொற்களை அறிமுகப்படுத்தலாம், அல்லது சொற்களைத் தலைப்புகளுக்குள் தொகுத்து அறிமுகப்படுத்தலாம். (விலங்குகள், பூச்சிகள், மரங்கள், உடல் உறுப்புகள், விளையாட்டுப் பொருள்கள், உணவுப் பொருள்கள் - என்பவற்றில் பயன்படுத்துகிற சொற்களை, இப்படித் தலைப்புகளுக்குள் தொகுத்து அறிமுகப்படுத்தலாம்)

நிலை 2 என்பது உயிர் எழுத்துகளைக் கற்பிக்கிற மூன்று அட்டைகளைக் கொண்டது. அட்டைகளின் ஓரங்கள் காவி வண்ணத்தில் உள்ளன. அறிமுகமாகும் எழுத்துகளில் ஒன்று குறிலாகவும் அடுத்தது நெடிலாகவும் இருக்கும். குறில் எழுத்தை ஒலிக்கும் பொழுது தலையை முன்பக்கமாகச் சாய்த்தும், நெடில் எழுத்தை ஒலிக்கும் பொழுது தலையைப் பக்கவாட்டில் சாய்த்தும் ஒலிக்கப் பயிற்சி தந்தால் மாணவர்களுக்குள் எழுத்து நன்கு பதியும். (physical movement combined with sound) (அ, ஆ) (இ, ஈ) (எ, ஏ) (ஐ) (ஒ, ஓ)










நிலை இரண்டில் உ, ஊ மற்றும் ஔ எழுத்துகள் விடுபட்டுள்ளன. 19 ஆவது அட்டையின் பின் புறத்தில் "க்" என்ற மெய்யெழுத்தும், 9 உயிரெழுத்துகளும் இணைந்து எழுத்துகள் உருவாகுவது காட்டப்பட்டுள்ளன. இந்த உயிர்மெய் எழுத்துகளிலுள்ள குறியீடுகள் புரிதலுக்காகச் சிவப்பு வண்ணத்தில் தரப்பட்டுள்ளன. இந்தக் குறியீடுகளின் அடிப்படையில் 9 X 18 = 162 உயிர்மெய்யெழுத்துகளையும் எளிமையாகக் கற்பித்து விடலாம்.

நிலை 3 இல் 8 அட்டைகள் உள்ளன. ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஒ, ஓ - என்கிற எட்டு உயிரெழுத்துகளும் 18 மெய்யெழுத்துகளோடு புணரும் பொழுது 144 உயிர்மெய் எழுத்துகளை உருவாக்குகின்றன. நிலை 1 இல் உள்ள 36 எழுத்துகளை உள்வாங்கிய மாணவர்கள் இந்த 144எழுத்துகளையும் மிக எளிமையாகக் கற்று விடுவார்கள். இதற்காகக் கற்றுக் கொடுப்போர் செய்ய வேண்டியது என்ன ?

குறியீடுகளை அறிமுகப்படுத்தி குறியீடுகளுக்குரிய ஒலிப்பு முறையை அறிமுகப் படுத்தி, குறியீடுகளைச் செய்தித்தாளில் மீள்பார்வை செய்து, இறுதியாகக் குறியீடுகளை எழுத்துகளோடு பொருத்தி ஒலிக்கப் பயிற்சி தருதல் - வேண்டும்.

இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தும் பொழுது 144 எழுத்துகளைக் கற்றுக் கொள்ளுதல் எளிமையானதாகி விடுகிறது. எ, ஏ வரிசைக்கான எழுத்துகளின் வேறுபாட்டினை மாணவர்களால் உணரமுடியாவிட்டால், குறில் நெடிலுக்கான குறியீட்டை அறிமுகப்படுத்தும் பொழுது தலையைச் சாய்த்துச் சொல்லுவதற்குப் பயிற்சி தரவும்.

www.thamizham.net

▣ பொதுவாகவே ஒ, ஓ வரிசை எழுத்துகளை மாணவர்கள் மூன்று எழுத்துகளாகவே கற்பனை செய்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் இவ்வெழுத்துகளை எழுதும் பொழுது, முதலில் கொம்பு போட்டு, பிறகு எழுத்து எழுதி, பிறகு துணைக்கால் எழுதுவதே காரணம். குறியீடுகளை அறிமுகப் படுத்திக் கற்பிக்கும் பொழுது அவை இரண்டும் குறியீடுகள்தான் நடுவில் வருவது மட்டும் எழுத்து, என அறிமுகப் படுத்தும் பொழுது மூன்றும் சேர்ந்த தொகுப்புதான் அந்த எழுத்து என்ற புரிதலை மாணவர்களுக்குள் ஏற்படுத்த வேண்டும்.

▣ ஈ வரிசைக்குப் பிறகு உ வரிசை ஏன் அறிமுகப்படுத்தவில்லை. இது அனைவரும் கேட்கும் வினா. உ, ஊ வரிசையில் புதிய எழுத்து உருவானதும், மாணவர்களால் அதற்கு மேல் எழுத்துகளை உள்வாங்க முடியாது போகும், அதற்குப் பிறகு அறிமுகப்படுத்தும் எந்த எழுத்தும் அவர்களுக்குள் பதியாது. குழப்பத்தையே ஏற்படுத்தும். இதனால் மெதுவாகக் கற்போர் (slow learners) மேலும் பின்தங்கி விடுகிறார்கள். எனவே தான் ஈ வரிசைக்குப் பிறகு உ, ஊ வரிசைகள் அறிமுகப் படுத்தப்படவில்லை

▣ இ, ஈ - வரிசையைக் கற்பிக்க கொம்பு, கொம்புச்சுழி அறிமுகப்படுத்தி - பிறகு எழுத்துகளை இணைத்து ஒலிக்கச் சொன்ன பொழுது புதிய வடிவம் பெற்ற டி, டீ - எழுத்துகளைக் கண்டு மெதுவாகக் கற்போர் மிரண்டனர். வினாக்குறியோடு பார்த்தனர். (இதற்கான விடையைத் தமிழமுது குறுவட்டில் வடிவமைத்துள்ளேன்). மேலே உள்ள கொம்பும், கொம்புச் சுழியும் மெதுவாகக் கீழிரங்கி கீழேயுள்ள ட எழுத்துடன் இணைந்து டி மற்றும் டீ ஆகுவதை பார்த்த அவர்கள் - ஓ கொம்புதான் அங்கு ஒட்ட இடமில்லாமல் கீழிரங்கி ஒட்டியதா என்று மகிழ்ந்தனர். கற்பிப்போர் கூட கரும்பலகையில் இதனை எழுதிக்காட்டி விளக்கலாம்.

நிலை 4 இல் 4 அட்டைகள் உள்ளன. இந்த அட்டைகளின் ஓரங்கள் கத்தரிப்பூ வண்ணம் தீட்டப்பட்டுள்ளன. இவற்றில் உ, ஊ, ஔ - வரிசை எழுத்துகள் கற்பிக்கப்படுகின்றன.










உ, ஊ என்கிற உயிர்எழுத்துகள், மெய்யெழுத்துகளோடு இணையும் பொழுது உருவாகுகிற உயிர்மெய் எழுத்துகள் புதிய வடிவங்களைப் பெருகின்றன. இவைகளைக் கூட மூன்று அடிப்படையான வடிவத்திற்குள் அடக்கிக் காட்ட முடியும். (எடுத்துக்காட்டு - தமிழக அரசு பாடப்புத்தகம் - அறிவியல் தமிழ்) ஆனாலும் உ, ஊ வரிசை எழுத்துகளின் 36 எழுத்துகளும் மாணவர்கள் மனதில் நிற்பதில்லை. ஏனெனில் இந்த எழுத்துகள், நடைமுறையில் அதிகம் பயனாகுவதில்லை. உ வரிசையில் - எட்டு எழுத்துகளே பயனாகின்றன (கு, சு, து,மு, நு, டு, மு, பு,) ஊ வரிசையில் ஏழு எழுத்துகளே பயனாகின்றன (கூ, சூ, தூ, ரூ, பூ, நூ, மூ) எனவே அதிகம் பயனாகுகிற இந்த எழுத்துகளை உள்ளடக்கிய சொற்களை மட்டும் அட்டையில் படிக்கத் தரப்பட்டுள்ளன. ஔ வரிசையில் மூன்றே எழுத்துகள் தான் பயனாகின்றன. எனவே மற்ற எழுத்துகள் பற்றிக் கவலைப் படவேண்டாம்.

ஆக தமிழில் படித்தல் திறனை வளர்த்துவதற்காக....

| | | | |
|---|---|---|---|
| ⊙ | நிலை 1 | ட முதல் ற வரை கற்பிக்கும் | 16 அட்டைகள் |
| ⊙ | நிலை 2 | அ - ஔ வரை கற்பிக்கும் | 3 அட்டைகள் |
| ⊙ | நிலை 3 | குறியீடுவழி கற்பிக்கும் | 8 அட்டைகள் |
| ⊙ | நிலை 4 | உ, ஊ, ஔ வரிசை | 4 அட்டைகள் |
| ⊙ | மாணவர்களின் வளர்நிலையைக் காட்டுகிற | | 1 அட்டை என |

........32 அட்டைகள் உள்ளன.

⊡ மொழி கற்றலுக்கான படிநிலைகளாக முதற்பக்கத்தில் குறிப்பிட்டுள்ள 11 படிநிலைகளில் 5 படிநிலைகளை வளர்த்தெடுக்க இந்த 32 அட்டைகள் உதவுவதாக இருக்கும்.

⊡ இந்த 32 அட்டைகளைப் பயன்படுத்தும் பொழுது தமிழ் தாய்மொழியாக இல்லையெனில், தமிழிலுள்ள எளிய பாடல்கள், இசைப்பாடல்கள், கதைகள், என்பவற்றால் சுவையான தமிழ்ச் சூழலை உருவாக்க வேண்டும். இந்தக் கேட்கும் சூழல் அவர்களது புரிதலை அதிகப்படுத்தும்

⊡ 32 அட்டைகளின்வழி செய்தித்தாள் படிக்கும் திறன் பெற்ற மாணவர்கள் தொடர்ந்து செய்தித்தாளையும், பிற புத்தகங்களையும் படித்துப் பழகுதல் வேண்டும். அவர்கள் படிக்கிற செய்தித்தாளில் இருந்தே......

- ◈ சூழலுக்கு ஏற்ப உரையாடுதல்,
- ◈ படித்த பகுதிகளில் உரையாடுதல் குறிப்பு எடுத்தல்,
- ◈ படித்த பகுதிகளைச் சிறு தொடர்களாக எழுத ஊக்குவித்தல்,
- ◈ படித்த பகுதிகளை விவரித்தல், நடித்துக் காட்டுதல்,
- ◈ சொந்தமாகக் கதை, கவிதை, கட்டுரை எழுதுதல்,
- ◈ படித்தவற்றை விளக்குதல், மேடையில் பேசுதல் -

என்கிற மொழி கற்பித்தலுக்கான மற்ற படிநிலைகளை மாணவர்களிடம் நிகழ்த்திக் காட்டலாம். (தற்பொழுதுள்ள பாடத்திட்டம் இந்தப் படிநிலைகளை வளர்த்துவதற்கான பாடத்திட்டமாக இல்லாதிருப்பதால், இதற்கான பாடத்திட்டங்களைத் தற்பொழுது உருவாக்கி வருகிறேன். இந்தப் பாடங்களை நமது பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தே வடிவமைத்து வருகிறேன்.)

தமிழ்மொழி கற்றலுக்கான இந்தப் 11 படிநிலைகளையும் வெற்றிகரமாக முடிக்கிற மாணவர்கள் தமிழில் மொழிப் புலமை உடையவர்களாக இருந்து, பல்வேறு படைப்பாக்கங்கள் செய்வதோடு, மொழிக்கான ஊற்றுக் கண்களாகவும் இருப்பார்கள்.

அன்புடன்

தமிழ்க்கனல், தமிழம் வலை,
www.thamizham.net
pollachinasan@gmail.com,
பேச : 9788552061
1.சம்பத்நகர், சூளேசுவரன்பட்டி, பொள்ளாச்சி - 642006